©
GOVERNMENT OF TAMIL NADU
2015

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 187A] சென்னை, வியாழக்கிழமை, ஆகஸ்ட் 27, 2015
ஆவணி 10, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு-2046

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

2015–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 27–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2015**

**தமிழ்நாடு மாநிலத்தில் மாநகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து ஆறாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப்பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக.–

**பகுதி–I.**

**முன்னுரை.**

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பகுதி II.**

**1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 15/1971.

349 ஆம் பிரிவிற்கு முன்புள்ள தலைப்பிற்கான மாற்றாக்கம்.

2. 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (இதன்பின்பு இந்தப் பகுதியில் 1971 ஆம் ஆண்டு சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 349 ஆம் பிரிவிற்கு முன்பு வரும், ‘‘உணவு நிறுவனங்கள்’’ என்கின்ற தலைப்பிற்குப் பதிலாக, ‘‘தங்கும் விடுதிகள் மற்றும் உணவு நிறுவனங்கள்’’ என்கின்ற தலைப்பு அமைக்கப்படுதல் வேண்டும்.

349–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. 1971 ஆம் ஆண்டு சட்டத்தின் 349 ஆம் பிரிவில்,–

(1) ஓரத்தலைப்பில் ''உண்ணும் விடுதிகள்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''தங்கும் விடுதிகள், உணவு நிறுவனங்கள் முதலியன'' என்கின்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (1) ஆம் உட்பிரிவில்,–

(i) ''உண்ணும் விடுதி'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''தங்கும் விடுதி, உண்ணும் விடுதி'' என்கின்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) ''உணவு அல்லது பருகும் பானம் எதனையும் நுகர்வதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''உணவு அல்லது பருகும் பானம் எதனையும் சாப்பிடுவதற்காக அல்லது நுகர்வதற்காக வந்து செல்பவர்களை அனுமதிக்கப்பட்டுள்ள'' என்கின்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3). (1) ஆம் உட்பிரிவிற்கு, பின்வரும் வரம்புரை மற்றும் விளக்கம் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

**வரம்புரை***:* ஆனால், 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் III/1939) வரையறை செய்யப்பட்டுள்ளவாறான ஒரு தங்கும் விடுதிக்கு அந்தச் சட்டத்தின்படி அதனை வைத்திருப்பவரால் பதிவு செய்யப்பட்டிருக்கிறதென்றால் இத்தகைய உரிமம் தேவையில்லை.

**விளக்கம்***.–* இந்தப் பிரிவின் மற்றும் 433 ஆம் பிரிவின் நோக்கத்திற்காக ''தங்கும் விடுதி'' என்பது, அரசால் அல்லது ஒரு உள்ளாட்சி அதிகார அமைப்பால் பராமரிக்கப்பட்டு வரும் ஒரு சத்திரம் அல்லது ஓய்வு விடுதி தவிர, பிற ஒரு உணவகம், உணவு உண்ணும் வசதியைக் கொண்டுள்ள விடுதி, சத்திரம் அல்லது ஓய்வு விடுதி, உரிமம் பெறாத குடியேற்ற சேம இடம் அல்லது சாதாரண வருகையாளர்கள் வந்து செல்லும் இடம் எதுவும் மற்றும் செலுத்தத்தின் பேரில் உணவுடன் அல்லது உணவின்றி உறங்குவதற்கான இடத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ள இடம் என்று பொருள்படும். ஆனால், இது பொது அல்லது ஏற்பளிக்கப்பட்ட கட்டாளுகையின் கீழுள்ள மாணவர்களின் விடுதி ஒன்றை உள்ளடக்காது.

433 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. 1971 ஆம் ஆண்டு சட்டத்தின் 433 ஆம் பிரிவில் (13) ஆம் கூறிலுள்ள (a) எனும் உட்கூறில்,–

(i) ''உணவகங்கள்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''தங்கும் விடுதிகள்'' என்கின்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) ''உணவு அல்லது பருகும் பானம் எதனையும் நுகர்வதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''உணவு அல்லது பருகும் பானம் எதனையும் சாப்பிடுவதற்காக அல்லது நுகர்வதற்காக வந்து செல்பவர்களை அனுமதிக்கப்பட்டுள்ள'' என்கின்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி III.

## 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

349 ஆம் பிரிவிற்கு முன்பு வரும் தலைப்பின் மாற்றாக்கம்.

5. 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் (இதன் பின்பு இந்தப் பகுதியில் 1981 ஆம் ஆண்டுச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 349 ஆம் பிரிவிற்கு முன்பு வரும், ''உணவு நிறுவனங்கள்'' என்கின்ற தலைப்பிற்குப் பதிலாக, ''தங்கும் விடுதிகள் மற்றும் உணவு நிறுவனங்கள்'' என்கின்ற தலைப்பு அமைக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 25/1981.

349 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. 1981 ஆம் ஆண்டு சட்டத்தின் 349 ஆம் பிரிவில்,–

(1) ஓரத்தலைப்பில் ''உண்ணும் விடுதிகள்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''தங்கும் விடுதிகள், உணவு நிறுவனங்கள் முதலியன'' என்கின்ற சொற்றொடர் சேர்க்கப்படுதல் வேண்டும்;

(2). (1) ஆம் உட்பிரிவில்,–

(i) ‘‘உண்ணும் விடுதி’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘தங்கும் விடுதி, உண்ணும் விடுதி’’ என்கின்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) ‘‘உணவு அல்லது பருகும் பானம் எதனையும் நுகர்வதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘உணவு அல்லது பருகும் பானம் எதனையும் சாப்பிடுவதற்காக அல்லது நுகர்வதற்காக வந்து செல்பவர்களை அனுமதிக்கப்பட்டுள்ள’’ என்கின்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3). (1) ஆம் உட்பிரிவிற்கு, பின்வரும் வரம்புரை மற்றும் விளக்கம் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

**வரம்புரை:** ஆனால், 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் III/1939) வரையறை செய்யப்பட்டுள்ளவாறான ஒரு தங்கும் விடுதிக்கு அந்தச் சட்டத்தின்படி அதனை வைத்திருப்பவரால் பதிவு செய்யப்பட்டிருக்கிறதென்றால் இத்தகைய உரிமம் தேவையில்லை.

**விளக்கம்.–** இந்தப் பிரிவின் மற்றும் 432 ஆம் பிரிவின் நோக்கத்திற்காக ‘‘தங்கும் விடுதி’’ என்பது, அரசால் அல்லது ஒரு உள்ளாட்சி அதிகார அமைப்பால் பராமரிக்கப்பட்டு வரும் ஒரு சத்திரம் அல்லது ஓய்வு விடுதி தவிர, பிற ஒரு உணவகம், உணவு உண்ணும் வசதியைக் கொண்டுள்ள விடுதி, சத்திரம் அல்லது ஓய்வு விடுதி, உரிமம் பெறாத குடியேற்ற சேம இடம் அல்லது சாதாரண வருகையாளர்கள் வந்து செல்லும் இடம் எதுவும் மற்றும் செலுத்தத்தின் பேரில் உணவுடன் அல்லது உணவின்றி உறங்குவதற்கான இடத்துடன் ஏற்படுத்தப்பட்டுள்ள இடம் என்று பொருள்படும். ஆனால், இது பொது அல்லது ஏற்பளிக்கப்பட்ட கட்டாளுகையின் கீழுள்ள ஒரு மாணவர்களின் விடுதி ஒன்றை உள்ளடக்காது.

7. 1981 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 432 ஆம் பிரிவில் (13) ஆம் கூறிலுள்ள (a) எனும் உட்கூறில்,– 432 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(i) ‘‘உணவகங்கள்’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘தங்கும் விடுதிகள்’’ என்கின்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) ‘‘உணவு அல்லது பருகும் பானம் எதனையும் நுகர்வதற்காக அனுமதிக்கப்பட்டுள்ள’’ என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘உணவு அல்லது பருகும் பானம் எதனையும் சாப்பிடுவதற்காக அல்லது நுகர்வதற்காக வந்து செல்பவர்களை அனுமதிக்கப்பட்டுள்ள’’ என்கின்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை.**

1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IV/1919) 279 ஆம் பிரிவு மற்றும் 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V/1920) 249 ஆம் பிரிவு மற்றவற்றிற்கிடையில் தங்கும் விடுதிகளுக்கான உரிமம் வழங்குவதற்கு வகை செய்கிறது. 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 15/1971) மற்றும் 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 25/1981) இதே மாதிரியான வகைமுறைகள் இல்லாமல் இருக்கின்றபோது, தங்கும் விடுதிகளை திறம்பட ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு அனைத்து மாநகராட்சிகளிலும் ஒரே மாதிரியான தரநிலையை பராமரிக்கும் பொருட்டு அரசு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 15/1971 மற்றும் தமிழ்நாடு சட்டம் 25/1981—ஐ பொருந்தத்தக்க வகையில் திருத்தம் செய்வதென முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ்.பி. வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள்*
*மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.